# நினைவில் வராத கனவுகள்

தேசியக் குழந்தை விருதாளர்

கு.அ.தமிழ்மொழி

தமிழ்மொழிப் பதிப்பகம்

# நினைவில் வராத கனவுகள்

கு.அ.தமிழ்மொழி


| | | |
|---|---|---|
| நூல் வகை | : | புதுப்பா |
| பதிப்பாண்டு | : | 14.12.2017 |
| நூல் அளவு | : | 1 x 8 டெமி |
| பக்கங்கள் | : | 96 |
| நூல் வடிவமைப்பு | : | கன்னிக்கோவில் இராசா |
| முன் அட்டை ஒளிப்படம் | : | செந்தமிழினியன் |
| பின் அட்டை ஒளிப்படம் | : | இராசேசு |
| வெளியீடு | : | தமிழ்மொழிப் பதிப்பகம்<br>01, முருகன் கோயில் தெரு,<br>சண்முகாபுரம்,<br>புதுச்சேரி - 605 009.<br>பேசி: 7418477364 |
| அச்சு | : | சாய்சிறி அச்சகம், சென்னை |
| விலை | : | உரூவா. **100/-** |

## NINAIVIL VARAATHA KANAVUGAL

### KU.A.THAMIZHMOZHI

| | | |
|---|---|---|
| Subject | : | Poetry |
| Published Year | : | 14.12.2017 |
| Size | : | Demy 1 x 8 |
| Pages | : | 96 |
| Book Design | : | Kannikovil Raja |
| Front Wrapper Photo | : | Senthamizhiniyan |
| Back Wrapper Photo | : | Rajesh |
| Published by | : | Thamizhmozhi Pathippagam<br>No.01, Murugan Koil Street,<br>Shanmugapuram,<br>Puducherry - 605 009<br>7418477364 |
| Printed at | : | Saisree Offset, Chennai |
| **PRICE** | : | **₹100/-** |






**காணிக்கை**

மண், மொழி, இனத்திற்காகப் போராடும்

மறத்திகளுக்கு.

# எட்டுத் திசைகளிலும்

## கு.அ.தமிழ்மொழி



கு.அ.தமிழ்மொழியின் கவி மொழிதல், மனித உறவுகள் மீது மையம் கொண்டிருக்கிறது. உறவு என்பது, பெண் ஆண் உறவு என்பதோடு சுருங்கி விடக்கூடாது. தனி மனிதர் இன்னொரு தனி மனிதரோடும், தனி மனிதர் சமூகத்தோடும், சமூகம் இன்ன பிறச் சமூகத்தோடும் கொள்ளும் உறவு என்ற விரிந்த பொருளில் உறவு என்னும் சொல்லை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். தமிழ்மொழியும் அவ்வாறே புரிந்து கொண்டிருக்கிறார். அது எனக்கு மகிழ்ச்சி தருகிறது..

மக்கள் சமூகத்தின் மகிழ்ச்சியும், உயர்வும் இந்த உறவினால் மேம்படும் என்று சான்றோர் கருதினார்கள். இருபால் உறவும் ஒரு குடும்பத்தை உருவாக்கும், சமூகத்தைக் காக்க அரசுகள் உருவாகும். ஒழுக்கங்கள், நியாயங்கள்,, தருமங்கள் என்பன எல்லாம் அமையும் என்று அவர்கள் நம்பினார்கள்.சங்க இலக்கியம், களவு கற்பாகிய குடும்பமாக அமைய வேண்டுமே என்று பதற்றம் கொள்கிறது. இவை எதற்காக? இருவர் உறவு, சமூக உறவாகப் பரிணமிக்க வேண்டும் என்பதற்குத்தான்

*எனினும், மனிதர்கள் தமக்குள் பிணக்கு கொள்வார்கள் ஆயினர். நாம் என்கிற அழகிய சொல், நான் – நீ என்றானது. மேல் கீழ் உருவானது. உயர்வு, தாழ்வு உருவானது.மனிதர்கள் பிரிந்தும் தமக்குள் பகைத்துக்கொண்டும் உருவானார்கள்.*

*எது இல்லாமையால் இந்நிலை? அன்பின் இணைப்பான உறவுகள் சீர்கெட்டுப் போனமைதான். வளரும் நாடுகள், தம் மக்களின் கல்விக்கும், கலைக்கும், தொழிலுக்கும்,, வேளாண்மைக்கும் ஒதுக்க வேண்டிய பணத்தை இராணுவத்துக்கும், இராணுவத் தளவாடங்களுக்கும் செலவு செய்ய வேண்டிய இழிநிலை எதனால் நேர்ந்தது?*

*சந்தேகம், அன்பின் பிணைப்பற்ற உறவு சீர்கெடலால் இந்த அபாயங்கள் நேர்ந்தன.*

*அன்பின் வழியது உயிர்நிலை. இதை மறந்தோம். வீழ்ச்சியுற்றோம்.*

*கவிகள், கதைஞர்கள், கலைஞர்கள் பணி கூடுதலாகிறது. நிலாவை அழகானது என்று மக்களுக்குச் சொல்லி அழகைப் புரிய வைத்தவர்கள் கவிஞர்களே ஆவார்கள். மனிதர்கள் பகைத்துக் கொண்டு மானுடம் சிதையும்போது, களத்தில் நிற்க வேண்டியவர்களும் கவிஞர்களே ஆவார்கள். மனிதப் பிணக்கின் காரணத்தைத் தேடுகிறார்கள் அவர்கள்.*

*கு.அ.தமிழ்மொழி, அந்தப் பெரும் பணியை நோக்கித் தன் கவிதைகளைச் செலுத்துகிறார்:*

**‘வாழ்க்கை என்பதுதான்**
**மழைத்துளியைப் போல்**
**மண் வண்ணமாய்**
**மாறிப் போய் விடுகிறது**
**வேறு வேறு நிறத்தில்’**

✡

**‘களவு போனது காடுகள்’**

✡

**சொர்க்கம், நரகம்**
**சொன்னவன் எவன்?**
**இருக்கும்**
**உலக இன்பத்தைப்**
**பகிர்ந்தளிக்க விரும்பாதவன்**
**☼**
**மேலுலகில்தான்**
**சொர்க்கமும் நரகமும்**
**என்றால்**
**அது தேவையில்லை**
**நீ அங்கே போ**
**☼**
**எங்களுக்கானது**
**இந்த உலகு'**
**☼**
**'அன்பென்பதை**
**அஃறிணையிடமிருந்து**
**அறியட்டும்**
**உயர்திணை**
**என சொல்லிக் கொள்பவை'**
**☼**
**'அன்று**
**என் பிறந்த நாள்**
**கைக் குலுக்கினாய்**
**என் கையோடு**
**ஒட்டிக் கொண்டது**
**உன் அன்பின்**
**இரேகைகளும்'**

*இந்த வரிகள், தமிழ்மொழி எந்தப் புள்ளியில் நின்று பேசுகிறார் என்பது புரிந்திருக்கும். அவர் கூட்டுக்குள் நின்று பேசாமல் வெளியில் நின்று பேசுகிறார். எட்டுத் திசைகளிலும் அவர் பார்வை திரும்பிக் கவனம் கொள்கிறது.*

**‘மழையைப் பற்றி**
**எழுதுவதை,**
**பேசுவதை விட**
**நனைவதின்பம்’**
**☼**
**‘பட்டாம்பூச்சிகளை**
**முன்பு போல**
**பார்க்க முடிவதில்லை’**
**☼**
**‘சாவை விடக்**
**கொடியதாக இருக்கிறது**
**வாழ்ந்து தொலைவது**
**என்ன செய்வது**
**செத்துத் தொலைவதை விட**
**வாழ்ந்து தான் பார்ப்போமே’**

**வாழ்க்கை குறித்து அவரது பார்வை முக்கியமானது.**
**‘இந்த வாழ்க்கை**
**குழந்தை**
**கைகளில் இருக்கும்**
**மண் பொம்மை’**

வாசகர் மனதில் பலப்பல படிமங்களை உருவாக்கும் பலப்பல வரிகளை (இந்தத் தொகுதியில்) எழுதி இருக்கிறார் தமிழ்மொழி. பெண் ஆண் உறவு குறித்த அவர் கவிதை வரிகள் செழுமையானவை.

பள்ளிகளில் இருந்தே தொடங்கி விடுகிறது, ஆண்களுக்குப் பெண் மேல் உயர் உணர்வு. வீடு, தெரு, சமூகம் அனைத்திலும் ஆண் மேன்மை அங்கீகரிக்கப்படுகிறது. இன்னமும், பால் இரண்டு அவை ஆண், பெண் என்றே கற்பிக்கிறார்கள் ஆசிரியப் பெரியோர்கள். முதலில் ஆசிரியர்களுக்குப் பரிந்துரைக்க வேண்டி இருக்கிறது. பால் மூன்று பெண், திருநங்கை மற்றும் திருநம்பி, அப்புறம் ஆண். இது பால் என்பதன் பொருள்.

உணவு பொது என்பதால் யாரும் சமைக்கலாம். ஆண் கட்டாயம் சமைக்கப் பயிற்றுவிக்க வேண்டும்.

உரிமை பற்றித் தமிழ்மொழி கூறும் சொற்கள் , மிகுந்த அர்த்தம் பொருந்தியவை.

**‘அப்படியொன்றும்**
**பெரிய வேறுபாடில்லை**
**உன் உரிமைக்கும்**
**என் விடுதலைக்கும்’**

இதன் விரிவு இதுதான். ஒரு பெண்ணை அடிமையாக்கிக் கொண்டிருக்கும் எவனும் சுதந்திரவான் இல்லை. அடிமையை வைத்திருக்கும் ஆணும் அடிமைதான்.

மனித மன முறிவுகள் பற்றி ஆழமாகவே யோசிக்கிறார் தமிழ்மொழி. மனித உறவுகள் அன்பால் மேம்படுமே, மகிழ்ச்சி வாழ்வில் தழைக்குமே என்கிறார் அவர். மனப் பிளவுகள், சமூகப் பிளவுகள் ஆகுமே என்றும் அவர் பதைக்கிறார்.

இந்தப் பதைபதைப்பே, கடந்த பல காலங்களில் பல கவிஞர்களை, படைப்புகளை உருவாக்கி இருக்கிறது. சரியான தளத்தில் சரியாகச் சிந்தித்துச் சரியாக எழுதுகிறார்.

புதுச்சேரி, தமிழ் உலகுக்கும், உலகச் சமூகத்துக்கும் வழங்கிய கொடை பெரிது. சங்கம் தொடங்கி இன்று வரைக்கும் பல படைப்பாளிகள் தோன்றிய, பணி செய்த புதுவை மண் தமிழ்மொழியாலும் பெருமை பெறும்.

தோழமையுடன்,

9. 11. 2017

# தமிழ்மொழியின் பெயர் சொல்லும் கவிதைகள்...



ஒரு வலியை, மகிழ்வை, சேதியை சொல்வதற்கு எளிய இலக்கிய வடிவமாக கவிதை இருப்பதால் முன்னெப்போதுமில்லாதபடிக்கு உலகம் கவிஞர்களால் நிறைந்து கொண்டிருக்கிறது. எங்குமாய் வெளிவருகிற தொகுப்புகள் அதை நாளும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. ஆக, மக்களின் வலி, அவலம், பிரச்சினை எல்லாமும் கவிதைகள் மூலம் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன, என்பதுதான் உண்மை.

கவிதைத்தொகுப்புகள் விற்கவில்லை. போடுவதற்கு பதிப்பாளர்கள் முன்வரவில்லை என்பதெல்லாம் கிடக்கட்டும். கால்பணம் போட்டு முக்கால்பணம் எடுக்கிற வியாபாரம் இல்லை, கவிதை எழுதுவது. எங்கோ ஒரு மூலையில் படிக்கிற ஒருவனை தனக்கானதாய் பரவசப்படுத்துகிற, கோபப்பட வைக்கிற வேலையைச் செய்கையில் கைப்பணம் போட்டு எழுதிய இந்த

வரிகள் தனக்கான வரும்படியை ஈட்டிவிட்டதாகவே நாம் கொள்ளவேண்டும். அதுவே எழுத்தின் இலக்கும் ஆகும்.

புதல்வி தமிழ்மொழியின் இந்த 'நினைவில் வராத கனவுகள்' தொகுப்பும் சமூகத்தின் வலிகளை, பரவசங்களை, அவலங்களை சொல்வதாகவே அமைந்துள்ளது வரவேற்கத் தக்கது. தொடங்கிய இரண்டாம் பக்கத்திலேயே மழை பற்றிய கவிதையைச் சொல்லியே ஆகவேண்டும். சின்ன வயதில் பள்ளிக்கூடம் போய்வருகையில் புத்தகப்பை நனையாமல் மழைக்கோட்டுப் பையில் போட்டு சுருட்டிக் கொண்டு ஆனந்தமாய் மழையில் நனைவது ஒரு சுகம். வீட்டுக்கு வருகையில் "எங்கையாவது மறப்புக்கு நின்னுட்டு வந்தா என்னாடா வூட்ட எவனாச்சும் தூக்கிகிட்டு போய்டப்போறான்னா... இப்பிடி நனைஞ்சிகிட்டு வர்ற..." சில சமயம் ஏச்சும், கடந்து சில நேரங்களில் உதையும் வாங்கிய மழைக்கால அனுபவங்கள் எனக்கு நிறையவே உண்டு.

அண்மைக்காலங்களில் காடுகள் அழிந்து மழை பொய்த்து அரிதாகப் போய்க்கொண்டிருக்கையில் தமிழ்மொழி சொல்வது போன்று நனைவதே மேல். ஏனென்றால், மழை இனி எப்போது வரும் என்று உறுதியாக சொல்லமுடியாதபடிக்கு சுற்றுச்சூழலை கொன்று விட்டோம்.

**களவு போனது காடுகள்**
**இன்னொரு மழை வருவதற்கான**
**எந்த தடயமும் இல்லை**
**அறிகுறியும் தென்படவில்லை**

**வரும் மழைக்காகக்**
**காத்திருப்பதைவிட**
**வந்த மழையில்**
**நனைந்துவிட்டுப்போவோம்**

**கிடக்கட்டும் குடைகள்**
**மூலையிலேயே...**

❖❖

**மழையைப் பற்றி**
**எழுதுவதை,**
**பேசுவதைவிட**
**நனைவதின்பம்.**

❖❖

**எந்த மரம், செடி, கொடியும்**
**மழைக்காகக் குடை பிடிப்பதில்லை**
**அவற்றுக்கெல்லாம்**
**மழை பிடிக்கும்.**

*போன்ற வரிகளெல்லாம் மழையின் முக்கியத்துவத்தை, அனுபவங்களை நமக்கு உரைப்பதாக அமைகின்றன. அடுத்து முக்கியமாய் சொல்லவேண்டிய கவிதை என்பது பெண்பிள்ளைகளின் பாடுகளை, அவர்களின் சுதந்திரம் பற்றியது.:*

**நடுத்தெருவில்**
**பேசி மகிழ்கின்றனர்**
**என்னோடு படித்தவர்கள்**
**இரவு ஆட்டம்**
**திரைப்படம் பார்த்து**
**வரப் போகிறான்**
**தம்பி அறிவாளன்**
**நண்பனின் வீட்டிற்கு**
**செல்கிறேன் என்று**
**சொல்லிவிட்டுப் போகிறான்.**
**எந்த நண்பன்**
**எங்கே வீடென்று**
**யாரும் கேட்பதில்லை**
**யாரும் கேட்பதற்கு முன்பே**
**சொல்லி விடுகிறேன்**
**ஏனெனில்**
**நான்**
**பெண்.**

*உண்மைதான். உச்சந்தலையில் ஆணியடிப்பதாய் இறங்குகின்றன கேள்விகள். ஆனாலும், நாம் என்ன எழுதினாலும் கலாச்சாரத்தின்*

*சீர்கேடுகள் மலிந்த திரைப்படங்களை, குடியை ஊக்குவிக்கிற ஆள்பவர்களைக் கொண்ட இந்தத் தேசத்தில் பெண் எனப்படுபவள் ஒரு பாதுகாப்புக்கு இன்னும் உட்படுத்தப்பட வேண்டியவர்களாகவே இருந்து வருவது நமது பெருந்துயர். அதையெல்லாம் தாண்டிப் போவதற்கு நாம் நெடுந்தூரம் கடந்து போக வேண்டியவர்களாகவே இருந்து வருகிறோம்.*

*மற்றுமொரு கவிதையாய் மதுக்கடை விடுப்பைப் பற்றி கேலி செய்வது:*

**திருவள்ளுவர்**
**வள்ளலார்**
**பிறந்த நாளில்**
**மூடுகின்றனர்**

**விற்பனையாகி விடுகிறதே**
**முதல்நாளிலேயே**

*இப்படி சமூகத்தின்பால் அக்கறை கொண்ட கவிதைகளைக் கொண்டு இக்கவிதைத் தொகுப்பு, தமிழ்மொழியின் பெயர் சொல்லும்படியாய் அமைந்திருக்கிறது. நமது வாசிப்பும், கருத்துக்களும்தான் இதைவிடவும் ஆழமான கவிதைகளை இச்சமூகத்திற்கு அடுத்து அவர் அளிப்பதற்கு உந்துதலாக அமையும்.*

*வாழ்த்துக்களுடன்*

**கண்மணி குணசேகரன்**

*மணக்கொல்லை*
***18.12.17***

# செதுக்குங்கள்
# சிலையாக்குங்கள்



காலங்கள் தோறும் எழுத்துகள் தங்களின் வடிவத்தை மாற்றிக் கொண்டாலும் முகத்தை, முகவரியை மாற்றிக் கொள்வதில்லை.அதனின் புறம் மாறி இருக்கும்; அகப்பொருள் ஒன்று தான்.

எந்தப் படைப்பும் மக்களுக்கானதாக இருக்க வேண்டுமே தவிர ஆளுவோர்களின் அரிப்பை சொறிந்து விடுவதாக இருக்கக் கூடாது.போர் மறவனுக்கு துமுக்கியைப் போன்றது எழுத்தாளனுக்குத் தூவல்.

சாதி, மத, தீண்டாமைக்கு எதிராகவும், தனியுடைமை சாய்த்து, மாய்த்து, பொதுவுடைமைக்குத் துணையாகவும் எழ வேண்டும். எழுத்தாளன் என்பவன் அறியாமை காரிருளை விரட்டுகின்ற செம்பரிதியாக உறுதியாக, இறுதிவரை இருக்க வேண்டும்.

படைப்பின் நோக்கம் ஆக்கம் தருவதாக இருந்தால்தான் அது உயிரோட்டமான எழுத்தாகும். அதைவிட்டு வெறும் நிகழ்வுகளின் தொகுப்பாக, செய்தியாக இருந்தால் அது எழுத்தின் பதர்.

என் எழுத்திற்கான காரணத்தைத் திரும்பத் திரும்பக் கேட்கின்றனர், எதற்காக எழுதுகிறாய் என்று. இல்லாமை, கல்லாமை இல்லாமல் எல்லோரும் எல்லாமும் பெற்று இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காகவே எழுதுகிறேன்

எழுத்தால், எண்ணத்தால் இம்மண்ணை மட்டுமல்ல விண்ணையும் அதிரச் செய்யலாம்.எழுத்தின் ஆற்றலை எளிதாகக் கருதாமல் அந்த எழுத்தாயுதத்தைக் கேடழிக்கப் பயன்படுத்த வேண்டும். புதுப்பா வழியாக நினைவில் வராத கனவுகளைச் சொல்லி இருக்கிறேன். தீப்பொறியாய், மழைத் துளியாய், மனதுக்குள்ளும், மண்ணுக்குள்ளும் விழுந்து அதனதன் பணி செய்யும் என்பது என் எண்ணம்.

அஞ்சுபவன் எழுதக் கூடாது. எழுதுபவன் அஞ்சக் கூடாது. அஞ்சினால் எழுத்தில் உயிரோட்டம் இருக்காது.இங்கே நிறையப் பேர்கள் தங்களை முன்னிறுத்திக் கொள்ளவும், சிக்கல் வராமல் எழுதவும், பரிசுகள் பெறவும் அதற்குத் தகுந்தாற்போல் எழுத்து வணிகம் செய்கின்ற கலையில் கைதேர்ந்தவராக இருக்கின்றனர்.

புரியாமல் எழுதுவதும் 'இசங்கள்' என்ற பெயரால் இருண்மைகளை எழுதுபவனே பெரிய எழுத்தாளர் என்கின்றனர். அப்படிப்பட்ட பெரிய எழுத்தாளர் ஆகின்ற வாய்ப்பு எனக்கில்லை.புரிந்துகொள்ளவும், புரியும்படியும் எழுதுபவள் நான்.தோழமையோடு கைக்குலுக்கிக் கொள்வதற்கும், தோள் கொடுக்கவுமே நானிருக்கிறேன்.

எழுத்து என்பது எரிதழல் போல நிமிர்ந்து நிற்க வேண்டும். மடமையை சாம்பலாக்கித் தன் பசி தீர்த்துக்கொள்ள வேண்டும். தள்ளாடி நடப்பவர்களுக்கு ஊன்றுகோலாகவும், இளைஞர்களுக்கு வாளாகவும், புறம் பேசுபவர்களின் சொல்லைத் தடுக்கும் கேடயமாகவும் இருக்க வேண்டும்.

பட்டாம்பூச்சிகளையே பார்த்துக் கொண்டிருந்தால் பசி தீருமா? பூவின் புன்னகையாலே நம் மனக்கவலை மாறுமா? எதுவாக இருந்தாலும் நேருக்கு நேர் சந்திக்கின்ற துணிவிருந்தால் துயரம் ஓடிப்போகும். துன்பம் தொலைந்து போகும். இன்பம் கதவு தட்டி உள்நுழையும்.

*புதுச்சேரி மண்ணின் மைந்தர் வானத்தை தன் வசப்படுத்திய வரலாற்று வாணர்* **திரு.பிரபஞ்சன் ஐயா** *சிறந்த ஆய்வுரையை அணிந்துரையாய் வழங்கி இருக்கிறார்.போற்றிப் பாதுகாக்க வேண்டியது அவரின் எழுத்தை மட்டுமல்ல, அவரையும் தான். அவர் வாழும் காலத்தில் நானும் வாழ்கிறேன் என்பது எனக்குப் பெருமையாக இருக்கிறது.அதனோடு தோழமையோடு பழகுகின்ற, மனத்திரை இன்றி மகிழ்வாக, எள்ளல் நடையில் துள்ளல் வகையில் பேசுவதில் வல்லவர்.*

*மணக்கொல்லை மக்கள் எழுத்தாளர்* **கண்மணி குணசேகரன் ஐயா** *தனக்கே உரிய மண்மணம் வீசும் பேச்சு, எழுத்து இவற்றாலேயே இன்றும் இந்த மக்களின் மேற்பூச்சு இல்லாத ஊர்ப்புற எழுத்தை இலக்கியமாக்கி வருகிறார். மணக்கொல்லையை உலகறியச் செய்த எழுத்துப்போராளி. அவரின் வாழ்த்துரை என்னை ஊக்கப்படுத்துகிறது.*

**பிரபஞ்சன் ஐயா***வும்,* **கண்மணி குணசேகரன் ஐயா***வும் 'நீ பாட்டு மட்டும் எழுதிக் கொண்டிராமல் சிறுகதையும் எழுது' என்று சொன்னார்கள்.அடுத்து வருவது சிறுகதையாகத்தான் இருக்கும்.அதற்கு முன் ஒரு மொழிபெயர்ப்பு கொண்டு வந்து விட வேண்டும்.*

*என்* **சிறகின் கீழ் வானம்** *2005 இல் வந்தது.அதற்கடுத்த* **புத்தனைத் தேடும் போதிமரங்கள்** *2017-இல் அதாவது 12 ஆண்டுகள் கடந்த பின்பு வந்தது. இதற்கிடையில்* **கல்! நில்! வெல்!** *என்கின்ற சிறார் பாடல் தொகுப்பு வந்தது. நான்காவதாக இந்நூல் வருகிறது*

*நூல் தலைப்பு வரைந்தளித்த ஓவிய மாமணி* **இரா.அன்பழகன்***, பிழைத் திருத்தம் செய்த* **சீனு.தமிழ்மணி***, வடிவமைத்த* **கன்னிக்கோவில் இராசா***, குறிஞ்சி விழா - 06 இல் வெளியிடுவதற்குத் துணை நின்ற* **செ.இரா** *மற்றும் தோழர்கள் அனைவருக்கும் நன்றி*

*என்னை வளர்த்தெடுக்கின்ற உங்களை வணங்கி மகிழ்கிறேன். நான் கல்லாகவே இருக்கிறேன். உங்களின் கருத்து என்னைச் செதுக்கி சிற்பமாக்கும்.செதுக்குங்கள். சிலையாக்குங்கள்.*

*அன்புடன்*

**கு.அ.தமிழ்மொழி**

# தன் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | **கு.அ. தமிழ்மொழி** |
| பிறந்த நாள் | : | 10.10.1993 |
| அகவை | : | 25 |
| கல்வித்தகுதி | : | இளங்கலை செவிலியர் (B.Sc NURSING)<br>முதுகலை நூலகம் மற்றும் செய்தி அறிவியல் ( M.L.I.S ) |
| தாய் பெயர் | : | பெ. குமாரி அறி.இ.,கல்.இ., (B.Sc., B.Ed.,)<br>அறிவியல் ஆசிரியை |
| தந்தை பெயர் | : | சீனு. அசோகன் க.மு., ( M.A.,)<br>அரசு கிளை நூலகம் |
| ஆசிரியர் | : | மூவடி துளிப்பா திங்களிதழ் |
| செய்தி ஆசிரியர் | : | சுட்டி விகடன் மாணவ ஆசிரியர் (2008-2009 ) |
| தலைவர் | : | மாணவர் பொதுநலத் தொண்டியக்கம் |
| செயலர் | : | பூந்தோட்டம் சிறார் சிந்தனைச் சிறகம் |
| மின்னஞ்சல் | : | thamizh1019@gmail.com |

**எழுதியுள்ள நூல்கள்:**

1. சிறகின் கீழ் வானம் (துளிப்பா)
2. கல்! நில்! வெல்! (குழந்தைப் பாடல்)
3. புத்தனைத் தேடும் போதி மரங்கள் (துளிப்பா)
4. நினைவில் வராத கனவுகள் (புதுப்பா)

**பெற்ற விருதுகள்:**

• ஜீவா விருது 2003 • கவித் தென்றல் 2005 • மனிதநேய முரசு 2005 • சிறுவர் கலைச் சிறகம் 2006 • அரிமதி தென்னகனார் அன்னை கோவிந்தம்மாள் விருது 2007 • சிந்தனைச் செம்மல் விருது 2007 • யுவ கலா பாரதி விருது 2007 • தேசியக் குழந்தை விருது 2007 • துளிப்பாத் துளிர் விருது 2007 • சிந்தனைச் செல்வி விருது 2007 • இளம் படைப்பாளி விருது • அரும்பணி ஆலயம் விருது

வீட்டில்
கூடுகட்டி இருக்கும்
சிட்டுக்குருவி

தோட்டத்துப் பந்தலில்
பூத்திருக்கும்
மல்லிகை

வாலையாட்டி வரும்
நாய்கள்

கொய்யா மரத்தில்
தாவி விளையாடும்
அணில்கள்

விண்மீன்கள்
எட்டிப் பார்க்கும்
இரவு வானம்

எனக்கில்லை
தனிமை
இவையெல்லாம் இருக்கும்வரை

⌘

ஏதேதோ
நினைவிற்கு வந்து போகிறது

ஆனால்
நினைவிற்கு வராது
போனது பற்றியே
நினைக்கிறது
மனம்

⌘

களவு போயின காடுகள்
இன்னொரு மழை
வருவதற்கான
எந்தத் தடயமும் இல்லை
அதற்கான அறிகுறியும் தென்படவில்லை

வரும் மழைக்காகக்
காத்திருப்பதை விட
வந்த மழையில்
நனைந்து விட்டுப்போவோம்

கிடக்கட்டும் குடைகள்
மூலையிலேயே...

⌘

என் மொழியை
நீ
கற்றுக்கொண்டது போல்
உன் மொழியில்லை

⌘

நான் உன் நிழல்தான்
உனக்கு முன்னும் போவேன்
பின்னும் வருவேன்
உனக்குள்ளும் மறைவேன்

நீ இருக்கும்
சூழலைப் பொறுத்தது
அது

⌘

யாருமற்ற
அந்த இரவு வானத்தில்
உனக்குத் துணையாக
அங்கே பறந்து வரலாம்
என்றுதான் நினைக்கிறேன்
இத்தனிமையில்
இருந்து தப்பிக்க..

ஆனால்
நான் திரும்பி
வீடு செல்கையில்
என் நினைவுகள்
உன்னை ஆட்கொள்ளக் கூடும்

வேண்டாம்
இப்படியே
இருந்து விடலாம்
நீ அங்கேயும்
நான் இங்கேயுமாய் . . .

⌘

சொர்க்கம், நரகம்
சொன்னவன் எவன்?
இருக்கும்
உலக இன்பத்தைப்
பகிர்ந்தளிக்க விரும்பாதவன்

மேலுலகில்தான்
சொர்க்கமும் நரகமும்
என்றால்
அது தேவையில்லை
நீ அங்கே போ

எங்களுக்கானது
இப்பூவுலகு

⌘

நரைத்து விடுகிறது
இதுதான்
வாழ்க்கை என்று
புரிந்து கொள்வதற்குள்

⌘

பசிக்கு
சோறு போடாதவர்கள்

படித்தவர்களுக்கு
வேலை தராதவர்கள்

வாழ
வீடு தராதவர்கள்

நோய்க்கு
மருத்துவம் செய்யாதவர்கள்

படிக்க
பள்ளி திறக்காதவர்கள்

குடிக்க மட்டும்
மதுக்கடை திறக்கிறார்கள்

⌘

நீ பேசினாய்
புரிந்தது
நீ அமைதியானாய்
நாங்கள் பேசினோம்

நீ
இது இது இப்படி இப்படி
பேசுவாய் என்று பேசினோம்

நீ
உன் அமைதி கலைத்தாய்
நாங்கள் பேசியதில்
நீயில்லை என்பதால்

ஆம்
அவரவர் பேச்சை
அவரவர் பேசட்டும்

⌘

போலியாய்
வாலையாட்டுவதில்லை
நாய்கள்
அவற்றின் கவனம்
காற்றின் வாசத்தில்
கலந்து இருக்கிறது

கலப்படமில்லா
அன்பைப் பொழிகின்றன
அவை

அன்பென்பதை
அஃறிணையிடமிருந்து
அறியட்டும்
உயர்திணை
என சொல்லிக் கொள்பவை

⌘

அன்று
என் பிறந்த நாள்
கை குலுக்கினாய்
என் கையோடு
ஒட்டிக் கொண்டன
உன் அன்பின்
இரேகைகளும்...

⌘

மழையைப் பற்றி
எழுதுவதை,
பேசுவதை விட
நனைவதின்பம்

⌘

எதை எழுதுவதென்று
தெரியாமல்
எழுதித் தொலைக்கின்றனர்

எதைப் படிப்பதென்று
புரியாமல்
படித்து முடிக்கின்றனர்

எதைப் பேசுவதென்று
அறியாமல்
பேசிக் கிடக்கின்றனர்

தெரிந்தும்
புரிந்தும்
அறிந்தும்
எழுதி, படித்து, பேசி
முடிப்பதற்குள்
முற்றுப்புள்ளி
வைத்து விடுகிறது
வாழ்க்கை

⌘

புத்தனின் அழுகை
அனைவரையும் அழ வைத்தது

ஏனழுகிறான் என்று
எவருக்கும் தெரியவில்லை
புரியவில்லை

புத்தன் அழுகிறான் என்று
எல்லோரும் அழுகின்றார்கள்

புத்தனிடம் கேட்கவும்
யாருக்கும் விருப்பமில்லை

நமக்கென்ன
நாமும் அழுது விட்டுப் போவோம்
காரணம் இல்லாமலா
புத்தன் அழுவான்?

⌘

சாவை விடக்
கொடியதாக இருக்கிறது
வாழ்ந்து தொலைவது

என்ன செய்வது
செத்துத் தொலைவதை விட
வாழ்ந்துதான் பார்ப்போமே?

⌘

என் அமைதிக்கான
காரணத்தை
அழுகையால்
சொல்ல முடியாது

⌘

அன்பிற்காகக்
காத்திருத்தலைவிட
ஆகச் சிறந்த கொடுமை
வேறில்லைதான்

உங்களின்
அன்புக் கயிற்றில்
ஊஞ்சல்
கட்டியிருக்கிறேன் நான்

அறுத்து விடாமல்
பார்த்துக் கொள்ளுங்கள்

ஏனெனில்
வீழும் வலி
எனக்கானது

உங்களால்
உணர வாய்ப்பில்லை

⌘

நீ
தொலைத்ததாகச் சொன்ன
இரவுகளைத்
தேட முயற்சி செய்கையில்
அதில்
தொலைந்து போகிறேன்

நானும்
என் இரவுகளுடன்

⌘

நான்
பெண் என்பதுவும்
நீ
ஆண் என்பதுவும் சரி

ஆனால்
உனக்கான பசிதானே எனக்கும்
எனக்கான உணர்வுகள்தானே உனக்கும்

நீ பெண்ணாகவும்
நான் ஆணாகவும்
மாறிப் போனால்
உன்னுரிமை போல
எனக்குரிமை வேண்டுமென்று
கேட்பாய் அல்லவா?

பிறகேன்
இப்போது மட்டும்
மறுக்கிறாய்?
வெறுக்கிறாய்

⌘

இந்த வாழ்க்கை
குழந்தை
கைகளில் இருக்கும்
மண் பொம்மை

⌘

எங்கும்
குவிந்து கிடக்கின்றன
குப்பைகள்

துடைப்பத்தை
சிலந்தி வலை
சிறைபிடித்திருக்கிறது

முதலில்
பன்னாட்டுச் சிலந்திகளிடமிருந்து
துடைப்பத்தை மீட்போம்

⌘

உன் தனிமையில்
நானும்
என் தனிமையில்
நீயுமாய்
நிரம்பிக் கிடக்கிறோம்

நினைவுகளிலாவது
இருந்து விட்டுப் போ

ஒருநாள்
என் நினைவில்
வராத கனவுகளாய்
நீ
மாறக்கூடும்

⌘

நடுத்தெருவில்
கூடிப் பேசி மகிழ்கின்றனர்
என்னோடு படித்தவர்கள்

இரவு ஆட்டம்
திரைப்படம் பார்த்து
வரப்போகிறான்
தம்பி அறிவாளன்

நண்பனின் வீட்டிற்கு
செல்கிறேன் என்று
சொல்லிவிட்டுப் போகிறான்

எந்த நண்பன்
எங்கே வீடென்று
யாரும் கேட்பதில்லை

யாரும் கேட்பதற்கு முன்னே
சொல்லி விடுகிறேன்

ஏனெனில்
நான்
பெண்

⌘

புத்தனாக்கவே
விரும்புகின்றன
போதிமரங்கள்

அவனோ
கோடரி மனத்தோடே
வருகிறான்

⌘

சிரிக்கச் சொல்லி
படம் பிடித்தனர் என்பது
படம் பார்ப்பவர்களுக்குத்
தெரியப் போவதில்லை

மனம் மட்டும்
ஏனோ சிரிக்க மறுக்கிறது

⌘

பெண்ணெனப் பிறந்து
விட்டதற்காகவே
கட்டுப்பாடுகள்
என்கின்ற விலங்குகள்
எல்லா திசைகளிலிருந்தும்
வந்து விடுகின்றன
உறவினர்கள், நண்பர்கள்
என்ற பெயரில்

விலங்குகளைத்
திறப்பதற்கான
எந்தத் திறப்புகளும்
உன் வசமில்லை
உடைப்பதைத் தவிர

⌘

ஆழ்துயிலில் இருக்கிறேன்
நான்
எந்தச் சிந்தனையுமின்றி
படுத்தவுடனேயே
உறங்கி விட்டேன்

நாளை குறித்தோ
அல்லது
எதிர்வரும்
காலங்களைக் குறித்தோ
எந்தக் கவலையும்
இல்லாமல் இருக்கிறேன்

இன்று நடந்த எதுவும்
என்னைத் தூங்க விடாமல் செய்யவில்லை
உறங்கிக் கொண்டிருக்கிறேன் நான்

கனவுகளின் உலகம்
மாறிக் கொண்டிருப்பதை
விழிப்பில்
உணர்ந்தேன்

⌘

தூறல்
விழத் தொடங்கியது

மனம் மட்டும்
தொங்கிக் கொண்டு
இருந்தது
நம்
நேற்றைய
சண்டையில்....

⌘

கடித
இலக்கியமாகிப் போனது
நலம்
நலமறிய அவா!

⌘

இறந்த பின்னர்
எல்லோரும்
பிணங்கள்தானே!

பிணங்களைப் புதைக்க
எதற்கு தனித்தனிச் சுடுகாடு?

செத்த பின்னும்
சாகாமல்
இருக்கிறதே
சாதீ

⌘

குயில் போலக் கூவவும்
மயில் போல ஆடவும்
கற்றுக் கொண்டாய்

ஆனாலும்
நீ
குயிலும் இல்லை
மயிலும் இல்லை

அவை
உன்னைப் போல ஆக
விரும்புவதில்லை
அது அது
அதுவாகவே இருக்கிறது

நீ மட்டும் ஏன்

அயல்மொழி கற்று
அன்னை மொழி மறக்கிறாய்?

⌘

கரை ஒதுங்கிய கட்டுமரத்தில்
குண்டு துளைத்ததோடு
சிதறிக் கிடக்கிறது
காய்ந்து போன
குருதிச் சுவடுகள்

கொந்தளித்துக் கொண்டிருக்கிறது
மனம் போலக்
கடலும்

⌘

நமக்கான
சிறு சண்டையில்
காத்திருக்கிறேன்
உன்னுடன் பேச..

நீயோ
காக்க வைப்பதையே
தண்டனையாகத் தருகிறாய்...

மற்றதை விடவும்
மிகப்பெரிய தண்டனை
இதுதான் என்று
அறிந்து வைத்திருக்கிறாய்
நீ..

⌘

அக் காட்டில்
மரங்கள் இருந்தன
ஆம்
பட்ட மரங்கள்
வெட்டுண்ட மரங்கள்

சருகுகள் உதிர்ந்து
வெப்பத்தை
உமிழ்ந்து கொண்டிருந்தன
அவற்றைக் கடந்து செல்கிறேன்
எங்கேயாவது
சின்ன உயிராவது தென்படுமா என

மேலே பறவையில்லை
கீழேயே
பார்த்துக் கொண்டு செல்கிறேன்
எறும்பையாவது காண்பேனா என்று

இறுதியில்
அது ஓர் இறகு

என் மூளை
அறியவில்லை
அது
கடைசிக்குருவியினுடையது என்று

⌘

நீ சொல்வதற்கெல்லாம்
தலையாட்டிக் கிடப்பதற்காக
நானில்லை

உன் சொல்லில்
உண்மையிருந்தால்
ஏற்பதற்குத் தடையுமில்லை

உனதுரிமையில்
தலையிட மாட்டேன்
என்னை நீ
தடுக்காத வரையில்..

அப்படியொன்றும்
பெரிய வேறுபாடில்லை
உன் உரிமைக்கும்
என் விடுதலைக்கும்

⌘

நீங்கள் நினைப்பது போல்
நான் கிறித்துவனில்லை
இசுலாமியன் இல்லை
இந்துவும் இல்லை
ஏனெனில்

எனக்கு
மதமில்லை
மதம் என்பதால்

மதமின்றிப் போனதால்
சாதி இல்லை

நான்
உங்கள் கற்பனைக்கும்
ஊகங்களுக்கும்
அப்பாற்பட்டவன்

சாதி, மதம்
சொல்பவன், ஏற்பவன்
மாந்தனில்லை

நான் மாந்தன்
நீங்கள்?

⌘

அம்மா, அப்பா
சொன்னது போலில்லை
இந்தக் காலம்

அவர்களின் வாழ்வில்
பொருள் இருந்தது

நம் காலத்தில்
பொருள் மட்டும்தான்
இருக்கிறது

⌘

வானம் பார்க்கும் ஆசை
வானூர்தியில் போனதும்
மண்ணைப் பார்க்கவே
ஆசைப்படுகிறது
மனம்

⌘

முதன் முதலாய்
இதழ் பிரித்து
இனிய தமிழ் பேச முயலும்
மழலையிடம்
“வாயை மூடி
அமைதியாய் இரு” என மிரட்டுகிறார்
முன்மழலை ஆசிரியர்

⌘

இயற்கைத் தாயின்
சேய்கள்தான்
உலக உயிர்களெல்லாம்

அதில்

நீ
நான்
நாம்
மரம், செடி, கொடி,
பறவை, விலங்கு, புழு, பூச்சி
எல்லாம் சேர்ந்து
கூட்டுக் குடும்பமாய்
வாழ்வதே இன்ப வாழ்க்கை

வாழ்கிறோமா
நாம்?

⌘

“திருமண அகவை ஆகிவிட்டது
இன்னமும் சமைக்கத் தெரியவில்லையா?”

வாழப் போகின்ற இடத்தில்
இப்படியா பெண்ணை வளர்ப்பது
என்று கேட்டால்
என்ன சொல்வது”
என்று கேட்கிறாள் அம்மா

ஆண்களுக்கான சமையல் புத்தகத்தை
அப்பா வாங்கித் தந்திருக்கிறார்
என்று எப்படிச் சொல்வது
அம்மாவிடம்?

⌘

யாருமில்லை
இந்த உலகத்தில்
என்னைத் தவிர

மாசில்லா காற்று
நானிலம்
வற்றாத ஆறுகள்
பறவை, விலங்குகள்
மகிழ்ந்திருக்கும் காடு

ஐந்தறிவு வரை
அனைத்தும்
இயற்கைத் தாயின் மடியில்

யாரைக் கண்டும்
அச்சப்படத்தேவையில்லை
இனி

வாழிடத்தை அழித்து
வேட்டையாடுவார்களோ
என்ற சிந்தனை தேவையில்லை

இது உங்கள் காடு
நாங்கள் வெளியேறி விட்டோம்

⌘

சாலைப் பள்ளத்தில்
தேங்கிய மழைநீரில்
முகம் பார்க்கும் நிலா

விரையும் வண்டியால்
சிதறிப் போகும்
ஆயிரம் நிலவாய்

⌘

என் உறக்கம்
உன் கனவில்
விழித்திருக்கிறது

⌘

காலம் போடும் முடிச்சுகளை
அவிழ்க்க . . . அவிழ்க்க
போனது காலம்

அவிழ்க்கும் காலத்தில்
போட்ட முடிச்சுகளை
அவிழ்க்க
எனக்கிருக்குமா காலம்?

யார் போட்டதிந்த முடிச்சுகள்?
நீ போட்டதை
நானும்
நான் போட்டதை
நீயும்
அவிழ்ப்பதுதான் வாழ்க்கையா?
அவரவர் முடிச்சுகளை
அவரவர் அவிழ்த்தால்
எளிதாகும் என்கிறாய்

அதைவிட எளிது
முடிச்சுகளை
போடாதிருப்பதென்று
உன் மூளை
சொல்லவில்லையா?

⌘

என்ன புரியும்படி
எழுதுகின்றாய்

புரியும்படி எழுதினால்
மதிக்கமாட்டான்

புரியாதபடி உளறினால்
எழ மாட்டான்

எழுதிய உனக்கு மட்டுமல்ல
படிக்கின்ற யாருக்கும்
புரியக்கூடாது
அதுதான் எழுத்து

வரைந்த உனக்கு மட்டுமல்ல
பார்க்கும் யாருக்கும்
என்னவென்று தெரியக்கூடாது
அதுதான் ஓவியம்

இப்படியாய்..
எழுத்தும், ஓவியமும்
மாறிப்போனதால்தான்
எல்லோரும்
எழுதவும், வரையவும்
தொடங்கிவிட்டனர்

⌘

அப்படியல்ல இப்படி என்கிறாய்
அதுவல்ல இது என்கிறாய்
எது செய்தாலும்
எது சொன்னாலும் மாறுபடுகிறாய்?

நீ சொல்கிறபடியெல்லாம்
நான், பேசி, எழுதினால்
அது
நானல்ல
நீதானே
உன்னை நானாக்க முயலவில்லை
நீ மட்டுமேன்
என்னை நீயாக்க முயல்கிறாய்?

நீயும், நானும்
நானும், நீயும்
நாமாகவே இருப்போம்
உன் தாகத்திற்கு
நான் நீர் குடிக்க முடியுமா?
என் பசிக்கு
நீ சாப்பிட முடியுமா?
உன் பசிக்கு நான் சோறு போடலாம்
என் தாகத்திற்கு நீ நீர் தரலாம்

அதுபோதும்
நீயும் நானும்
நானும் நீயுமாக இருப்போம்

⌘

வந்து வந்து போகிறது
சில சமயம் வரவே மறுக்கிறது
வருவதற்கும்
வராமல் போவதற்கும்
எது காரணமெனப் புரியவில்லை.

என் கனவில் நீ
உன் கனவில் நான்
வருவேனா?

உன் கனவில்
நான் வரவில்லை என்றால்
பிறகேன் நீ என் கனவில்

நான் வராத கனவு
உனக்கெதற்கு?

நீ வரும் கனவில்
இனி நானிருக்க மாட்டேன்

⌘

பேச்சில், எழுத்தில்
பெண்ணுரிமை, பெண் விடுதலை
பெண்ணியம் பேசுவது
எளிதாகவும், சுவையாகவும் இருக்கும்
கைத்தட்டல்கள் கிடைக்கும்
இயல்பு வாழ்க்கைக்கு ஒத்து வராது
ஏனாம்?

அடுப்பை யார்
பற்ற வைத்தாலும் பற்றும்
உலையில் யார்
அரிசி போட்டாலும் வேகும்
காய்கறி யார் நறுக்கினாலும்
துண்டாகும்

இன்று உன் சமையல்
நாளை என்னுடையது
ஞாயிற்றுக்கிழமை பொதுச் சமையல்

நீ எனக்காக
நான் உனக்காக
நாம் நம் குழந்தைகளுக்காக

அதுதான் வாழ்க்கை
அதுதான் இன்பம்
அதுவே தான்

⌘

எதுவாக இருந்தாலும்
சொல்லிவிடத் தயங்குவதில்லை

ஆனாலும்
சில நேரங்களில்
தயங்குகிறதே மனம்?
ஏன்? எதற்கு?

பிறரின் மனத்தைக்
காயப்படுத்தக்கூடாது
என்பதற்காகத்தானே!

அதனால்தான்
குருதி வழியும்
என் காயத்திற்கு
மருந்து போட
யாரும் வரவில்லை

⌘

மாந்தனாகிய
என்னை விட
நீ எப்படி உயர்வு என்கிறாய்
என்றேன் அப்பறவையிடம்
கூடி இருக்கிறோம்
குழப்பம் விளைவிப்பதில்லை
சாதி, மதம் எங்களுக்கில்லை
சரிபாதி உண்டு என்கிறாய்

எல்லாம் சரிதான்
ஆனால்
ஆறறிவு படைத்தவர்கள் நாங்கள்
என்கிறேன் நான்

இப்படி சொல்லில் மட்டும்
சொல்லிக் கொண்டிருப்பதால்தான்
நாங்கள் உயர்வு
என்று பறந்து சென்றது
அப்பறவை

நானும்
பறவையாகிப் போனாலென்ன
என்று
வானத்தைப் பார்த்தேன்

⌘

நான்
வருத்தத்தில் இருக்கிறேன்
என்ன ஆயிற்று
என நீங்கள் கேட்பீர்களா?

பலருக்கும்
இப்படி கேட்கக்கூட ஆளில்லை
என்பதே மிகப்பெரிய கவலை

பலர் கேட்டாலும்
சொல்வதில்லை
இதனால்தான் சிலர் கேட்பதே இல்லை

இப்படிக் கேட்டாலும்
சொல்லாத நண்பர்களே!
தயவுசெய்து
புலம்பாதீர்கள்

உங்கள் வருத்தத்தைக்
கேட்க ஆளில்லை என்று

⌘

நீங்கள்
என்னை
முதன்முறை பார்க்கையில்
என்ன தோன்றியிருக்கும்
உங்களுக்கு?
அமைதியானவள்,
நல்லவள்,
பண்பானவள்

அல்லது
இவற்றிற்கு
எதிர்மறையாகக்
கூட இருக்கலாம்

நீங்கள்
கண்ணுற்ற முகம்
என்னுடையதுதான்

ஆனால்
அது
என் மனமில்லை

⌘

ஆண்டாண்டு
சூரனைக் கொன்றும்

முருகனுக்கு,
வள்ளி தெய்வானை
திருமணம் நடத்தியும்

சூரனும் சாகவில்லை
வள்ளி, தெய்வானைக்கும்
பிள்ளை இல்லை

ஆனாலும்
சொல்லிக்கொண்டிருக்கிறோம்
அறிவியல் உலகில் வாழ்கிறோம் என்று

⌘

காசு போட்டால்
தட்டில் திருநீறு

பணத்தாள் போட்டால்
கையில் திருநீறு

காசில்லை என்றால்
சுற்றி வரவேண்டும்

காசிருந்தால்
நேரில் சந்திக்கலாம்

ஓ!
காசேதான் கடவுளடா..

⌘

உண்டியல் இல்லா
கோயில்கள் இல்லை

நந்தியை விடவும்
ஏன்
கடவுளை விடவும்
உண்டியல் உயரம்
மிக அதிகம்

கடவுள்
வணிகப் பொருள்

கோயில்
வணிகத்தலம்

பக்தன் நுகர்வோர்

நன்றாகவே நடக்கிறது
மூட வணிகம்
மூடப்படவேண்டிய வணிகம்

⌘

தாழப் பறக்கும்
தட்டானுக்கும்,
கூச்சலிடும்
தவளைக்கும்
தெரிகிறது
மழை வரும் நேரம்

⌘

வீடென்று நாம் கட்டிக்கொள்வது
குருவிக்கூடு போன்றதன்று
அதற்கு வாழ்விடம்
நமக்குச் சிறைக்கூடம்

கம்பளிப்பூச்சி
கூடுகட்டிய பின்
சிறகு முளைத்து
பட்டாம் பூச்சி ஆகிறது

நாம் வீடு கட்டி
முடித்தவுடன்
சிறகிழந்து
கம்பளிப்பூச்சியாகி விடுகிறோம்

⌘

“மழை பொழிகிறதே
‘சன்னலை’ மூடு
சாரல் அடிக்கப் போகிறது”
என்கிறாள் அம்மா

கதவைத் திறந்துகொண்டு
தெருவுக்கு ஓடி வருகிறது
மனம்

⌘

உலகம்
திறந்த வெளிச் சிறை

வீடு
நம் சொந்தச் சிறை

நமக்கென்றுமில்லை
விடுதலை

⌘

விழுந்த குழந்தை
தானே எழுந்து
ஓடுவதைப் போல
மனமிருக்கிறது

⌘

அசோகர்
மரம் நட்டார்

‘ஷாஜகான்’
‘தாஜ்மகால்’ கட்டினார்

இருந்தால்
இருந்து விட்டுப் போகட்டும்

நானெதற்கு
இதைப் படிக்க வேண்டும்?

என் பாட்டன்
கல்லணை கட்டினான்
ஏரிகள் வெட்டினான்
அருட்செல்வி ஆயி அம்மாள்
குளம் வெட்டினாள்

இதுதானே
எங்கள் வரலாறு

⌘

இருளில் இருக்கிறேன்
வெளிச்சத்தில்
நடப்பதை எல்லாம்
பார்த்துக்கொண்டு

⌘

எந்த மரம், செடி, கொடியும்
மழைக்காகக்
குடை பிடிப்பதில்லை
அவற்றுக்கெல்லாம்
மழை பிடிக்கும்

⌘

தூக்கணாங்குருவிக்கூட்டில்
தடையில்லா மின்சாரம்
வழங்கிக் கொண்டிருக்கும்
மின்மினி போல

தான் மட்டுமல்லாமல்
தன்னைச் சுற்றியிருக்கும்
இடத்தையும் மணக்கச் செய்யும்
மல்லிகை போல

தன் பகையை
தன் எல்லைக்குள் விடாது
விரட்டுகின்ற
நாய் போல

துளி மழையில்
உறக்கம் கலைந்து
விழித்தெழுந்திடும்
விதை போல

கொதி எண்ணெயில்
நீர்த்துளிகள்
பட்டுத் தெறிப்பது போல

புல் நுனியை
பனி மகுடம்
சூடியது போல

கால் தடத்தை
அலை வந்து
அழிப்பது போல

மணல் வீட்டைக்
கட்டி மகிழும்
குழந்தை போல

தூண்டில் மீனுக்கு
மண்புழுவை
இரையாகத் தந்தது போல

தேசிய நெடுஞ்சாலையைக்
கடக்கும்
நத்தை போல

வாழ்க்கை

⌘

இந்த நாளின் தொடர்ச்சி
இரவோடு முடிந்து விடுமா?
இல்லை
தொடருமா?

இரவு என்பது
இமை மூடல்தானே!

பகலில்
பரிதி மட்டும்தான்
இரவு வானில்
எத்தனை கோடி விண்மீன்கள்?

⌘

சோறு போட்டாலும்
போடாவிட்டாலும்
காவல் காக்க
மறப்பதில்லை நாய்கள்

பிள்ளைகள் எல்லாம்
அப்படியில்லை
அப்படி இல்லை என்பதை
நமக்குச் சொல்கின்றன

பெருகி வரும்
முதியோர் இல்லங்கள்

⌘

நினைவுபடுத்துகிறது
அஞ்சல்காரரின்
மிதிவண்டி மணியோசை
எழுத மறந்த கடிதத்தை

⌘

கோழி கூவியே
எழுந்து பழகிய அப்பா
இப்போதெல்லாம்
அலாரம் வைக்க சொல்கிறார்

ஊர்ப்புற வீடு விற்று
எங்களின் படிப்பிற்காய்
நகர வாழ்க்கையில்
சிக்கிக் கொண்டதன் காரணமாய்

அடுக்ககத்தில் வீடென்பதால்
வாசல் தெளித்து
கோலம் போடவும்
மறந்தே போனாள் அம்மா

மார்கழிப் பனியில்
கோலத்தின் நடுவே
சாணத்தில் பூத்திருக்கும்
பூசணிப் பூ

மாக்கோலம் மாறி
வண்ணக்கோலமாய் ஆனதனால்
பட்டினியாய்க் கிடக்கின்றன
எறும்புகள்

⌘

பட்டாம்பூச்சிகளை
முன்பு போலப்
பார்க்க முடிவதில்லை

வயல்வெளி,
பூந்தோட்டம்
எல்லாம் வீடுகளாகிப் போனதால்
கல்லறையாகிப் போனதோ
கூட்டிற்குள்?

⌘

எல்லோருக்குள்ளும்
புதைந்து கிடக்கிறது
புதையல்

மாற்றான் நிலத்து
புதையலையே
தோண்டி எடுக்க
எல்லோரும் பேராசைப்படுகின்றனர்

தம் வீட்டுப் புதையல்
களவு போனதை அறியாமல்

⌘

குடையைத் தேடி எடுத்தபோது
மழை நின்று விட்டிருந்தது

எதற்கும் எடுத்துப் போவோம்
என்று எடுத்துச் சென்றபோது
வரவே இல்லை மழை

மழை இனி வராதென்று
குடை மறந்து போனேன்

கொட்டோ கொட்டென்று
கொட்டித் தீர்த்தது

குடையின்றி நனைந்தேன்
பிறகு
குடையிருந்தும் நனைகிறேன்

⌘

கடவுளின் வேண்டுதல்
“மாந்தனே!
நீங்கள் செய்யும்
எல்லாத் தவற்றையும்
என் மீது போட்டுவிட்டு
அவனின்றி ஓரணுவும் அசையாது
எல்லாம் அவன் செயல்” என்கிறீர்

“எல்லாம் என் செயல் என்றால்
என் உண்டியல் உடைப்பும்
என் சிலை திருட்டும்

என் செயலா?
அல்லது
உன் செயலா?”

⌘

நானில்லாத போது
யார் யாரோ அமர்கிறார்
என் நாற்காலியில்

நான் வந்த போது
வேறு நாற்காலி போட்டு
அமரச் சொல்கிறார்கள்

நான்கு பேர்கள்
வந்தமர்வதற்கானதா நாற்காலி

அவரவர் நாற்காலியில்
அவரவர் அமரட்டும்

என் நாற்காலிக்கு நீயும்
உன் நாற்காலிக்கு நானும்
எப்போதும் ஆசைப்பட்டதில்லை

நாற்காலியும்
யார் அமர்ந்தாலும்
எதிர்ப்பு தெரிவிப்பதில்லை

⌘

கள்ளி,
சப்பாத்தி என்று
படர மறுப்பதில்லை
முல்லைக் கொடிகள்

⌘

“ஒரு கதை எழுதப் போகிறேன்”
இப்படித்தான்
பல நாட்களாக
இல்லை இல்லை
பல ஆண்டுகளாக
சொல்லிக் கொண்டிருக்கிறேன்
ஆனால்
எழுதிய பாடில்லை

இப்போதுகூட
இந்தப் பாடல்
நான் கதை எழுதப் போவதைப்
பற்றித்தான்

ஐயோ!
நான் ஏன்
இப்படி
பாடலுக்குள்ளேயே
சிக்குண்டு கிடக்கிறேன்?

இறுதியாக
உங்களிடம்
நான் ஒன்று சொல்ல வேண்டும்
“நான் ஒரு கதை எழுதப் போகிறேன்”

⌘

என்னதான்
மூன்று பக்கம்
கடல் நீர் இருந்தாலும்

நம் காலில் இருக்கும்
மணல் துகள்கள்
முழுவதுமாக
கழுவ முடியாமல்
ஒட்டிக் கொண்டு வந்து விடுகின்றன
வீடு வரைக்கும்

உன் நினைவுகளைப்போல்

⌘

கண்ணாமூச்சி ஆட்டம்
ஆடுவது
போலிருக்கிறது

உனக்கும்
எனக்குமான
உறவு

நீ
கண்பொத்திக் கொண்டு
என்னைப் பிடிக்க முயல்வதும்
நான் உன்னிடம்
அகப்படாமல்
எதிரிலேயே
தள்ளி இருப்பதுவும்

இதுவல்ல வாழ்க்கை

⌘

எனக்கான வானம்
இருக்கிறதிங்கே
எனக்கான பூக்களும்
மலர்கிறதிங்கே
எனக்கானது என்பது போல்
உனக்கானதும் இங்கே
உள்ளதென்று நம்பு

என் வானமும்
உன் வானமும்
ஒன்றுதான்

உன் பரிதியும்
என் பரிதியும்
ஒன்றுதான்

வாழ்க்கை என்பதுதான்
மழைத்துளியைப் போல்
மண் வண்ணமாய்
மாறிப் போய் விடுகிறது
வேறு வேறு நிறத்தில்

⌘

நீயும் நானும்
முடிவு செய்துவிடமுடியாது

நம் முடிவென்பது
நமக்கானது மட்டுமல்ல

நம்மைச் சுற்றியும்
இருக்கின்றன
கண்ணுக்குத் தெரியாத
முள்வேலிகள்

⌘

கயிறு கட்டி மேயும்
ஆடு, மாடுகளா நாம்?

நிமிர்ந்து
வானம் பார்ப்பது எப்போது?

அக்கம் பக்கம் இருப்பவர்கள்
யாரென்று
அறிந்துகொள்வது என்று?

வெள்ளத்தில் மிதக்கையில்
அடுத்த வீட்டுக்காரனை
மொட்டை மாடியில்
சந்தித்துக்கொள்ளும் போதா?

⌘

என்னை
இவ்வுலகிற்கு
அடையாளம் காட்டிய
என் எதிரிகளுக்கும்
இரண்டகர்களுக்கும்
என் நன்றிகள்

அவர்கள்
இல்லையெனில்
என்னை நீங்கள்
யாரும் அறிந்திருக்க முடியாது

என் ஆற்றலையும்
என் வலிமையையும்
எனக்குணர்த்தியதும்
வெளிப்படுத்தியதும்
அவர்கள் தான்

⌘

திருவள்ளுவர்
வள்ளலார்
பிறந்த நாளில்
மூடுகின்றனர்

விற்பனையாகி விடுகிறதே
முதல்நாளிலேயே

⌘

அசோகனை
புத்தனாக்கியது
கலிங்கப்போர்

அசோகச் சக்கரத்தை
அரசுச் சின்னமாக்கிய பின்
நாளும் நடக்கிறது
கலிங்கப்போர்

⌘